## தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் - 2016

தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி, நோர்டிக் அபிவிருத்தி நிதியக் கடன் மற்றும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி என்பவற்றிற்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட 1711-எஸ்ஆர்ஜ(எஸ்எவ்), 2413-எஸ்ஆர்ஜ, எஸ்எல்-பி-70, எஸ்எல்-பி-92, என்டிஎவ் 324, பீஎல்ஏ201011 மற்றும் பீஎல்ஏ201012 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் இச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. கைத்தொழில்கள், சுற்றுலாத்துறை, மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகளை ஊக்கப்படுத்துவதன் மூலம் தென் மாகாணத்தின் பொருளாதார நிலைமையை முன்னேற்றுவதற்கு உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். காலி நகரத்தை இணைப்பதற்கான நுழைவு வீதி ஒன்றுடன் தென் மாகாணத்திலுள்ள மாத்தறைக்கு மேல் மாகாணத்திலுள்ள கொட்டாவையை இணைக்கின்ற 126 கிலோமீற்றர்கள் நீளமான இலங்கையின் முதலாவது நுழைவு கட்டுப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலையே செயற்திட்டத்தின் வெளியீடாக இருந்தது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 661.14 மில்லியன் தொகையாகும். தென்பகுதி அதிவேகப் பாதையின் நிர்மாணத்திற்கான ஒட்டுமொத்த நிதி மூலங்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடனளிக்கும் முகவர் | உடன்பட்ட தொகை | சதவீதம் |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | % |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 186.00 | 28.13 |
| சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி | 103.00 | 15.58 |
| நோர்டிக் அபிவிருத்தி நிதியம் | 5.40 | 0.82 |
| சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | 0.80 | 0.12 |
| சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி | 138.21 | 20.90 |
| இலங்கை அரசாங்கம் | 227.73 | 34.45 |
| **மொத்தம்** | **661.14** | **100.00** |

மேல் மாகாணத்திலுள்ள கொட்டாவையிலிருந்து தென் மாகாணத்திலுள்ள பின்னடுவ வரையான 95.05 கிலோமீற்றர்கள் நீளமான தென்பகுதி அதிவேகப் பாதைப் பிரிவு 2011 நவம்பர் 27 இல் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்டிருந்ததுடன் தென் மாகாணத்திலுள்ள பின்னடுவவிலிருந்து கொடகம வரையான 30 கிலோமீற்றர்கள் நீளமான ஏனைய அதிவேகப் பாதைப் பிரிவு 2014 மார்ச் 16 இல் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது. நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கல் மீது வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தென்பகுதி நெடுஞ்சாலைக்கு நேரடியான அல்லது மறைமுகமான இணைப்பைக் கொண்டிருந்த 14 தேசிய மற்றும் மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகள் மற்றும் தென் மாகாணத்திலுள்ள 02

பாலங்களின் நிர்மாண வேலைகள் என்பவற்றிற்கு அண்ணளவாக ரூபா 4.40 பில்லியன் தொகையான கடன்களின் சேமிப்புக்களை பயன்படுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்து பிரயோகித்தல் மற்றும் சந்தர்ப்பங்களின் போது கணக்கீட்டு மதிப்பீடுகளை நியாயமாக தயாரித்தல் என்பவற்றிற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

உரிய கடன் காலப்பகுதிகள் முடிவடைதல் மற்றும் 2014 மார்ச் 16 இல் அதிவேகப் பாதையின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைதல் போன்ற விடயங்களை கருத்தில் கொள்ளாமல் 03 கடனளிக்கும் முகவர்களுடன் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கைகளின் கீழ் தனித்தனியாக 2015 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைப்புடன் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுல்ப்படுத்தல் முகவரிற்கு செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்றவற்றின் கையளிப்பு செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்குகளை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

ஒப்பந்த உடன்படிக்கையின் 3.1 மற்றும் 3.2 ஆம் உட்பிரிவுகளால் வேண்டப்பட்டவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் ஒருவர் கொக்மடுவ குறுக்குப்பிரிவில் உள்ள சிவில் வேலைகளை திருத்துவதற்காக சுதந்திரமான மதியுரையாளர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்குப் பதிலாக செயற்திட்டத்தின் மதியுரையாளர் ஒருவராக நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியங்களின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்திற்குரிய பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு | 2016 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | 2016 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 186.00 | 21,392 | - | - | 20,581 |
| சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி | 329.00 | 43,766 | - | - | 43,635 |
| நோர்டிக் அபிவிருத்தி நிதியம் | 5.40 | 621 | - | - | 583 |
| சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி சங்கம் | 0.80 | 92 | - | - | 75 |
| சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி | 138.21 | 15,895 | 2,041 | 2,040 | 16,965 |
| இலங்கை அரசாங்கம் | 227.73 | 26,107 | 352 | 336 | 37,952 |
| மொத்தம் | **887.14** | **107,873** | **2,393** | **2,376** | **119,791** |

மேலே குறிப்பிடப்பட்டவாறு ரூபா 4.40 பில்லியன் தொகையான கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் சேமிப்புக்களை பயன்படுத்துவதற்காக அதிவேகப் பாதையின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தன. மேலும் அதில் ரூபா 1,570 மில்லியன் தொகை சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட 2016 யூன் 30 ஆம் திகதிய கடன் உடன்படிக்கையின் முடிவுத் திகதியில் உள்ளவாறு செலவிடப்படாது இருந்ததுடன் இது பின்னடுவ தொடக்கம் கொடகம வரை மேற்கொள்ளப்பட்ட அதிவேகப் பாதை நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரரின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. வங்கிக் கணக்கிற்கு கடன் பெறுகைகளை மாற்றிய நேரத்தில் கடனின் மீதித் தொகையை பயன்படுத்துவதற்காக முறையான செயல்நடவடிக்கைத் திட்டம் காணப்படாதமை அவதானிக்கப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேலே குறிப்பிடப்பட்டவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது ரூபா 4.40 பில்லியன் கூட்டுத்தொகையான செலவிடப்படாத மீதிகளை பயன்படுத்துவதற்காக தென் மாகாணத்திலுள்ள 06 தேசிய வீதிகளின் 46.70 கிலோமீற்றர் மற்றும் 14 மாகாண வீதிகளின் 56.50 கிலோமீற்றர் நீளத்தை புனரமைப்பதற்கும் 02 பாலங்களை புனரமைத்து அகலப்படுத்துவதற்கும் அதிவேகப் பாதையின் தென்பகுதிப் பிரிவிலுள்ள கொக்மடுவவில் சரிவுத்தளத் தவறுகளிற்கான சீரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானித்திருந்தது. அதன் மீதான புரிந்துணர்வு விஞ்ஞாபனம் பின்னடுவ தொடக்கம் கொடகம வரையான அதிவேகப் பாதைப் பிரிவை நிர்மாணிப்பதற்காக ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரருடன் 2014 சனவரி 28 இல் கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 07 தேசிய மற்றும் மாகாண வீதிகளின் 23.20 கிலோமீற்றர்களின் புனரமைப்பு வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொக்மடுவவில் சரிவுத்தள தவறுகளின் சீரமைப்பு வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயன்முன்னேற்றத்தில் காணப்பட்டது.

(ஆ) வேலையின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிராத தனியார் குடியிருப்புக்களிற்கு நெறிப்படுத்தப்பட்ட மாத்தறை நகரத்திலுள்ள 220 மீற்றர்கள் நீளமான வீதியின் புனரமைப்பு வேலைகள் ரூபா 01 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை 2017 ஒக்தோபர் 11 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக புலனாய்வுகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் மாத்தறையிலுள்ள புனரமைக்கப்பட்ட அபேகுணவர்த்தன மாவத்தை வீதியில் பல வெடிப்புக்கள் காணப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 வரையிலும் வேண்டப்பட்ட சீரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை பௌதீகப் பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் ரூபா 294 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு வேண்டப்பட்ட 11 கிலோமீற்றர்கள் நீளமான கொடகம - தெலிஜ்ஜவில வீதியுடன் சேர்ந்த வடிகாலமைப்பு முறைமை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்னடுவ தொடக்கம் கொடகம வரையான அதிவேகப் பாதையின் நிர்மாணம் தொடர்பான ரூபா 5,324 மில்லியன் கிரயத்திலான முரண் கட்டளைகள் ஒப்பந்த நிபந்தனையின் 13.1 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக

2015 மார்ச் 14 இல் குறைநிவர்த்தி பொறுப்புக் காலப்பகுதி கடந்த பின்னரும் மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக அதிவேகப் பாதையின் உரிய பிரிவின் நிர்மாணத்திற்காக ரூபா 5,017 மில்லியன் தொகையான ஒப்பந்தத்தின் ஆரம்ப மதிப்பீட்டுக் கிரயம் 106 சதவீதத்தால் விஞ்சியிருந்தது.

(ஆ) தென்பகுதி அதிவேகப் பாதைப் பிரிவிலுள்ள கொக்மடுவவில் மண்சரிவு பாதுகாப்பு மற்றும் சீரமைப்பு வேலைகள் மீது ரூபா 260 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளாமல் உப ஒப்பந்ததாரர் ஒருவர் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2016 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைகள் மீது ரூபா 19 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அப்பட்டியலிடப்பட்ட வேலைகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒப்பந்த ஆவணங்களின் பொது நிபந்தனையின் 4.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணைமுறிகள் அவரின் சொந்தக் கிரயங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயலாற்றல் பிணைமுறிகள் தொடர்பாக ஒப்பந்ததாரரால் செலவிடப்பட்ட ரூபா 19.20 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் மீள்நிரப்பப்பட்டிருந்தது.

### 3.5 சர்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிவேகப்பாதை முகாமைத்துவப் பிரிவின் பயன்பாட்டிற்கான ரூபா 20 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தை விஞ்சி ஒப்பந்ததாரருக்கு மாற்றப்பட்ட கடன் பெறுகைகளில் அவர்களின் பயன்பாட்டிற்காக ரூபா 31.20 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது 04 மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், வேண்டப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட தரப்பினர்களின் அங்கீகாரங்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மாற்றப்படாமல் 2016 திசெம்பர் 31 வரையிலும் செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு தொழிற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவுடன் தொடர்புடைய கிரயங்களை எதிர்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 35 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.6 பயனற்ற செலவினங்கள்

செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதிலுள்ள தாமதங்கள் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ரூபா 384.80 மில்லியன் கூட்டுத்தொகையான வட்டி செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், காணி சுவீகரிப்பு தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.